★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.வின் இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'சென்னை மிகவும் பிடித்துவிட்டது' என்கிறார் சீனப் பிரதமர்!

சென்னை, டிச. 7—

'சென்னை எங்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது,' என்று சீனப் பிரதமர் கூறியிருக்கிறார்.

'சென்னை இந்தியாவின் லாச்சார ஸ்தலங்களுள் ஒன்று—ஒரு முக்கியமான தொழில் வர்த்தகக் கேந்திரம்—ஒரு சுதந்திரமான தன்மையுடையது—என்பது எங்களுக்குத் தெரியும்.

"தொழில், வர்த்தகம், போக்குவரத்து, லாச்சாரம் இவற்றை விரிவாக்கவேண்டும்—அபிவிருத்தி செய்யவேண்டும்—இதுதான்

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 4] சென்னை: கார்த்திகை 22உ வெள்ளி (7—12—56) ★ ★ வெளியூர்: கார்த்திகை 23உ சனி (8—12—56) [இதழ் 154

'ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு'

டாக்டர் அம்பேத்கார் மறைவு குறித்து தி. மு. க. பொதுச்செயலாளர்

'சமூகப்புரட்சியின் சின்னம் மறைந்தது'

இந்தியாவெங்கும் சோக இருள்

இந்தியாவில், 'தாழ்த்தப்பட்டோர்' என்ற இழிநிலையைப் போக்குவதற்கு அயராது உழைத்த உத்தமர்—தலை சிறந்த பகுத்தறிவுவாதி—அரசியல் பேரறிஞர்—சட்ட நிபுணர்—இந்திய அரசியல் சட்ட கர்த்தாக்களில் முதன்மையானவர்—டாக்டர் பி. ஆர். அம்பேத்கார், நேற்று காலை 6 மணியளவில், புதுடில்லியில் இயற்கை யெய்தினர் என்ற செய்தி, நம்மை எல்லாம் திடுக்கிட வைத்துவிட்டது.

'இந்தியத் துணைக் கண்டத்திற்கு அவரது மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்' என்று, திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில், அவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ள பொதுச்செயலாளர் அவர்கள், அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'அறிவக'த்தில்

டாக்டர் அம்பேத்காரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இன்று, தி மு கழகத் தலைமை நிலையமான 'அறிவக'த்தில் கொடி தாழப் பறக்கவிடப்பட்டிருக்கிறது.

மக்கள் சபை ஒத்திவைப்பு

டாக்டர் அம்பேத்கார் மறைவு பற்றி செய்தியறித்த மக்கள் சபை ஆழ்ந்த கவலையில் ஆழ்ந்தது.

அவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில், மக்கள் சபையும் மாகிலங்கள் சபையும் ஒத்திவைக்கப்பட்டன.

'புரட்சியின் சின்னம்'

"இந்தியாவில், எல்லாவகையான இழிவுகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராகக் கிளம்பியுள்ள சமூகப் புரட்சியின் சின்னம் மறைந்துவிட்டது"

என்று, பண்டித நேரு மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

"அம்பேத்கார், இந்திய அரசியல் சட்டகர்த்தாக்களில் ஒருவர் என்ற முறையிலும், தாழ்த்தப் பட்டவர்களுக்காக அயராது பாடுபட்டவர் என்ற முறையிலும், இந்து மத சீர்திருத்தச் சட்டகர்த்தா என்ற முறையிலும் இந்தியாவில் மறக்க முடியாதவராவார்"

என்றும், பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறார்.

சடலம்

அவரது சடலம், பம்பாய்க்கு விமான மூலமாக எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. முன்னாள்

(4-ம் பக்கம் பார்க்க)

ஈடன் போர் வெறியின் எதிரொலி

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு!

லண்டன், டிச. 6—

ஈடன் போர் வெறியின் எதிரொலியின் விளைவு, இப்போது பிரிட்டிஷ் மக்கள் ஒவ்வொருவராலும் உணரப்படுகிறது.

வாழ்க்கைச் செலவு கணிசமான அளவு உயர்ந்து வருகிறதாம். பிரிட்டனில் பால், சொட்டி, மாமிசம், பெட்ரோல் முதலிய பொருள்கள் விலை ஏறிக்கொண்டேபோகின்றனவாம்.

மற்றும் பஸ் போக்குவரத்துச் செலவு, வீட்டு வாடகைச் செலவு, வீடு கட்டும் செலவு, விமானப் போக்குவரத்துக் கட்டணம் எல்லாம் உயர்ந்துகொண்டு செல்கின்றனவாம்.

★

ஐ. நா. போலீஸ் படைச் செலவு

'ஏற்கமாட்டோம்' என்கிறது சோவியத் ரஷ்யா

"ஐ நா. அவசர காலப் போலீஸ் படைக்கான செலவினை ஏற்கமாட்டோம்; செலவு முழுவதையும் பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய ஆக்கிரமிப்பு நாடுகளே ஏற்கவேண்டும்.

"ஐ. நா. உறுப்பினர்கள் செலவினைப் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்" என்று தீர்மானம் வந்தால் அதனை எற்கமாட்டோம்—அலட்சியப் படுத்துவோம்"

என்று, அமெரிக்காவில் உள்ள ரஷ்யத் தூதுவர் கூறியிருக்கிறார்.

"இந்தியாவுக்கு சர்வதேச ஒத்துழைப்பு கிர்வாக நிறுவனம் அமைக்க இயந்திர தொழில் நிபுணர்கள் 62 பேரை அனுப்பியிருக்கிறது" என்று நிதி மந்திரி, மாகிலங்கள் சபையில் தெரிவித்தார்.

காஷ்மீரை விடுவிக்க 'ஆசாத் காஷ்மீர்' தயாராகிறது?

"காஷ்மீர் பிரச்சினையை விவாதிப்பதைத் தவிர வேறெதையும் உருப்படியாகச் செய்யத் தவறிவிட்ட ஐ நா.-வை இனியும் நாங்கள் நம்பிக்கொண்டிருக்கப் போவதில்லை.

"'ஆசாத் காஷ்மீரில்' இளைஞர்களுக்கெல்லாம் கட்டாய இராணுவப் பயிற்சியளிக்கப்பட்டுவருகிறது.

"ஜம்மு காஷ்மீர் மக்கள் விடுவிக்கப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை"

என்பதாக, 'ஆசாத் காஷ்மீர்' ('விடுதலை பெற்ற காஷ்மீர்') சர்க்காரின் ஒரு மந்திரியான மௌலவி நூருதீன் என்பார் சமீபத்தில் கூறியிருப்பதாக பாக். பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன என்று தெரியவருகிறது.

டாக்டர் அம்பேத்கார் மறைவுக்குப் பொதுச்செயலாளர் அனுதாபம்

தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்கும் நலத்திற்கும் அயராது அரும்பாடுபட்டு அரிய நன்மைகள் பல ஆற்றிவந்த மாபெரும் தலைவரும், இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள முக்கியமான சில அரசியல் பேரறிஞர்களில் ஒருவரும், சிறந்த பகுத்தறிவுவாதியுமான டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்கள் திடீரென இயற்கை எய்திய செய்தி கேட்டுத் திடுக்குற்றேன். அவரது ஈடு செய்ய முடியாத இழப்பு, ஆறுத்துக்கத்தையும் துயரத்தையும் தருகிறது. அவரைப் பிரிந்து வருந்தும் உற்றார், உறவினர், நண்பர் ஆகியோருக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி.மு.கழகம்.

ஆங்கிலோ—பிரெஞ்சுப் படைகளை வெளியேற்றிவிட்டு ஐ. நா. படை நுழையும்!

கெய்ரோ, டிச. 6—

"போர்ட் செய்த்திலிருந்து ஆங்கிலோ-பிரெஞ்சுத் துருப்புக்கள் வெளியேறியபின்னர், ஐ நா. அவசரகாலப் போலீஸ் படை அங்கிருந்து வெளியேறிவிடும்"

என்று, படையின் அதிகாரி ஒருவர் அறிக்கைமூலம் கூறியிருக்கிறார் என்று தெரியவருகிறது.

ஆங்கிலோ-பிரெஞ்சுப் படைகள் வெளியேற்றம் குறித்து சம்பந்தப்பட்ட படைத் தளபதிகளுடன் ஐ நா. படைத் தளபதி பர்ன்ஸ் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் தெரியவருகிறது.

மூன்று வாரம்

'ஆங்கிலோ-பிரெஞ்சுப் படைகள், எகிப்திலிருந்து வெளியேற இரண்டு அல்லது மூன்று வாரங்கள் ஆகும்,' என்று ஆங்கிலோ-பிரெஞ்சுப் படைகளின் தளபதிகள் கூறியிருக்கின்றனர்.

வழக்கறிஞர் போராட்டம் வெற்றி

கேரள கவர்னர் அறிவிப்பு

திருவனந்தபுரம், டிச. 6—

'கேரள உயர் நீதிமன்றத்தின் தற்காலிக பெஞ்சு ஒன்று, திருவனந்தபுரத்தில் அமைவது பற்றி சென்ற டிசம்பர் 13-ந் தேதிக்குள் அறிவிப்பு வரும்,' என்று மாகில கவர்னர் டாக்டர் பி. இராம கிருஷ்ண ராவ் அறிவித்திருக்கிறார்.

இது, திருவனந்தபுரம் வழக்கறிஞர்கள் நடத்திய போராட்டத்தின் வெற்றிக்கு அறிகுறியாகும்.

தொழிற்சாலைகள்

டில்லிக்கு தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்திற்குச் செல்லும் கவர்னர் பத்திரிகையாளரிடம் பேசுகையில், 'கவுன்சில் கூட்டத்தில் கேரளத்தில் பல தொழிற்சாலைகளை நிறுவுமாறு வற்புறுத்திப் பேசுவேன்; மேலும் அதிக உணவுப் பொருள்கள் ஒதுக்குமாறும் கேட்பேன்,' என்றும் கூறியிருக்கிறார்.

ரிக்ஷா 'சர்க்கா' தயாராகிவிட்டதாம்!

லக்னே, டிச. 6—

புதிய 'நூற்பு இயந்திரம்' ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்!

இதற்குப் பெயர் நூற்கும் ரிக்ஷா' (ரிக்ஷா சர்க்கா) என்பதாம்!

இது ராஜஸ்தான் சர்க்காரின் தொழிற்சாலை ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டதாம்!

இப்போதுள்ள 'சர்க்கா'வை விடப் பல வழிகளிலும் உயர்ந்த ஒன்றாகும் இது!

இதில் சுமார் 10 பேர்வரை ஒரே நேரத்தில் நூல் நூற்கலாமாம்!

தலைமை நிலையச் செய்தி:

தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம்

29—12—56

சனியன்றும்

பொதுக்குழுக் கூட்டம்

30—12—56

ஞாயிறன்றும்

சேலத்தில்

நடைபெறும்

'அறிவகம்' சென்னை 5—12—56 } —தலைமைக் கழகம் (தி. மு. க.)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 7—12—'56 வெள்ளி

டெல்லியின் யோசனை?

'புலிப்பால்கூடக் கொண்டு வந்து விடலாம் போலிருக்கிறது; பிள்ளைக்குக் கல்லூரியில் இடம் தேடிப்பெறுவது அதை விடக் கடினமாயிருக்கிறதே!' என்று பெருமூச்சுவிடும் பெற்றோர்கள் ஏராளம்.

'தகுதி—திறமை' என்றுகூறி வேறு, பலருக்குக் கல்லூரிகளில் இடம் மறுக்கப்பட்டுவிடுகிறது. இந்த அவல நிலையிருக்கும்போது, 'கல்லூரிகளில் மாணவரின் எண்ணிக்கை 800-க்குமேல் இருத்தலாகாது' என்று டில்லி கல்வி இலாகா யோசனை ஒன்று கூறியிருக்கிறதாம்! 'இந்த யோசனையை ஏற்காத கல்லூரிக்கு மானியம் கிடைக்காது; நிதி உதவி தரப்பட முடியாது' என்றுவேறு மிரட்டியிருக்கிறதாம்!

'இந்த அபாரமான யோசனையைக் கைவிடுவதே புத்திசாலித்தனம்; இந்த யோசனை முட்டாள்தனம்' என்று வருணித்திருக்கிறது, ஒரு இதழ்!

கல்லூரிகளில் இடம் கிடைப்பது குதிரைக் கொம்பாயிருக்கும்போது, கல்லூரிக் கல்வி பெற வசதியிருந்தும் வாய்ப்பற்றுப்போவோர் பலராயிருக்கும்போது, டில்லி இப்படி ஒரு யோசனையைக் கூறியிருப்பது கூட வேடிக்கையல்ல! இந்த யோசனையை வெளியிடுவதற்காகக் கூறியுள்ள காரணம்தான் மிக வேடிக்கையானதாயிருக்கிறது.

மாணவர்களிடை ஒழுக்கக் கேடு வளர்ந்து வருகிறதாம்! அதற்குக் காரணம், கல்லூரிகளில் 'கூட்டம்,' அதிகமாயிருப்பதுதானாம்! இந்த ஒழுக்கக்கேட்டைத் தடுப்பதற்குக் கல்லூரியில் மாணவர் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமாம்.

இன்று நாட்டில் நிலவுகிற சூழ்நிலைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இன்றைய கல்லூரி மாணவர்களின் மனப்போக்கை ஆராய்ந்தால், அவர்களது நடவடிக்கைகள், ஒழுக்கக்கேட்டையே நோக்கமாகக் கொண்டனவன்று என்பதைக் காணமுடியும்.

மாணவர்களிடை ஒழுக்கக் கேடு வளர்ந்துவிட்டது என்று கூறுவதே, விவாதத்திற்குரியதாகும்.

பாட்னாவிலும் அலாகாபாத்திலும், அகமதாபாத்திலும் மாணவர்களின் எழுச்சியை மனதில் கொண்டுதான், மாணவர்கள் கெட்டுப் போய்விட்டார்கள் என்று கூறுகிறார்களோ ஆட்சியாளர் என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது, புதிய யோசனையை ஆழ்ந்து நோக்கினால்!

மாணவர்கள் கெட்டுப் போய்விட்டார்கள் என்று பலர் கூறுவதற்கு ஆதாரங்களாக அவர்கள் காட்டுவதெல்லாம், மாணவர்கள் அவ்வப்போது தங்கள் பிரதேசத்தினுடையவும் தங்களினுடையவும் நலன்கள் பாதிக்கப்படும்போது கிளர்ந்தெழுகிறார்களே, அந்தச் சம்பவங்களைத்தானே அல்லாது வேறெவற்றை? இந்தக் கிளர்ச்சிகள், மாணவர்களின் ஒழுக்கக் கேட்டிற்கு எடுத்துக்காட்டு என்று கூறப்படுவதை நிதானமான சிந்தனையுடைய எவரும் ஒப்பிவிடமாட்டார்கள்.

அப்படியே கிளர்ச்சிகளில் ஈடுபடுவது ஒழுக்கக்கேடுதான் என்றால், இந்த ஒழுக்கக்கேட்டிற்கு வித்திட்டவர்கள் இன்று ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ் தலைவர்கள்தான் என்பது முற்றிலும் மறுக்கவொண்ணாத உண்மையாகும். தங்களுக்குத் தேவையான காலத்தில், மாணவர்களிடை அரசியல் காரணங்களுக்காகக் கிளர்ச்சியிலீடுபடும் மனப்பான்மையை வளர்த்துவிட்டு, இன்று தாங்கள் ஆட்சிக்கு வந்துவிட்டதாலேயே அந்த மனப்பான்மை மாணவர்களிடை கூடாது என்று எதிர்பார்ப்பது எப்படி நியாயமாகும்? இதை முன் பொருமுறை நாம் விளக்கியிருக்கிறோம்.

இந்தப்படி, விவாதத்திற்குரியதாயிருக்கிற ஒழுக்கக் கேடு என்ற ஒரு காரணத்தைக் காட்டி, கல்லூரிகளில் 800 பேருக்குமேல் இருக்கக் கூடாது என்கிறது டில்லி. கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 800 என்று கட்டுப்படுத்தப்பட்டு விடுவதாலேயே, மாணவரிடை வளர்ந்திருப்பதாகச் சர்க்கார் கூறுகிற ஒழுக்கக்கேடு எப்படிக் களையப்பட முடியும்? டில்லி சர்க்காருக்குத்தான் இந்தநியாயம் வெளிச்சம்.

அப்படியே, மாணவரிடை நிலவுவதாகக் கூறும் ஒழுக்கக் கேட்டினைக் களைய இந்த ஏற்பாடு பயன் தருவதாக வைத்துக் கொண்டாலும், கல்லூரிகளின் எண்ணிக்கை, தேவைக் கொப்ப அதிகரித்தாக வேண்டுமே? அதற்கு டில்லி என்ன திட்டம் வைத்திருக்கிறது? இப்போதிருப்பதைப் போன்று குறைந்தது இரண்டு மடங்கு கல்லூரிகள் அல்லவா தேவைப்படும்?

டாக்டர் இராதாகிருஷ்ணனைத் தலைவராகக் கொண்ட பல்கலைக் கழக விசாரணைக் குழுவே, 'ஒரு கல்லூரியில் 1 500 பேர் வரை பயிலலாம்' என்று கூறியிருக்கும்போது, அந்தச் சிபாரிசைக்கூடக் காற்றில் பறக்கவிட்டு, டில்லிப் பெரியவர்கள் தமிச்சையாக ஒரு யோசனையைக் கூறி, 'ஏற்காவிட்டால் மானியம் கிடையாது' என்று மிரட்டுவது, விவேகமானதல்ல!

கல்வி பெருகுவதற்கு வழி செய்யவேண்டிய பொறுப்பிலிருப்போர், இதுபோன்று—'நினைத்ததை எல்லாம் செய்வோம்' என்ற போக்கில் செல்லுவது பெருந்தவறாகும்; கண்டித்தற்குரியதாகும்.

வானொலி 'லைசென்ஸ்'கள் பற்றி ஒரு தகவல்

1956 அக்டோபர் 31-ந் தேதியன்று இந்தியாவில் மொத்தம் 11 28,514 வானொலி 'லைசென்ஸ்'கள் அமுலில் இருந்தன. இவற்றில், பம்பாயில் 2,65,336; சென்னையில் 1,91,057; மேற்கு வங்காளத்தில் 1,53,791—ஆக இருந்ததாம்!

பார்மோசா செஞ்சீனாவுடன் இணையும்?

ஜப்பான் பிரதமர் முயற்சி

டோக்கியோ, டிச. 9—

பார்மோசா, சீனாவுடன் இணைக்கப்படுவதற்கான முயற்சிகளில் ஜப்பான் பிரதமர் ஹடோ யாமா ஈடுபட்டிருக்கிறார்!

பார்மோசாவில் பதுங்கியிருக்கும் சியாங்-கே-ஷேக், செஞ்சீனாவுடன் உறவுகளைச் சரிக்கட்டிக்கொள்ள வேண்டும் என்று, ஹடோ யாமா கூறியிருக்கிறாராம்.

இது குறித்து, சீனப் பிரதமர் சௌ-என்-லாயுடனும் சியாங்-கே-ஷேக்குடனும் அவர் தொடர்பு கொண்டிருப்பதாக ஜப்பான் இதழ்கள் தகவல் தந்திருக்கின்றன.

கோவாமீது சில

பொருளாதார நடவடிக்கைகள்

பலன்கள் பற்றி தகவல் தர இயலாதாம்

புதுடில்லி, டிச. 5—

"கோவா சம்பந்தமாகச் சில பொருளாதார நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன; ஆனால், இவற்றைப் பொருளாதார நிர்ப்பந்தங்கள் என்று கூறிவிடுவதற்கில்லை. இந்த நடவடிக்கைகள் அவ்வப்போது ஆராயப்பட்டு வருவதுடன், தொடர்ந்து பரிசீலனையில் இருந்து வருகின்றன. இந்த நடவடிக்கைகளின் விவரங்கள் பற்றியோ, இவற்றின்மூலம் இதுவரை கிடைத்துள்ள பலன்கள் பற்றியோ தெரியப்படுத்துவது பொது நலனுக்கு உகந்ததாக இருக்காது" என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மாநிலப் புது அமைப்பு

சர்க்கார் ஊழியர் மாற்ற விபரம்

மாநிலப் புது அமைப்பை ஒட்டி 5 900 சர்க்கார் ஊழியர்கள் சென்னையிலிருந்து கேரளத்திற்கு மாற்றப்பட்டனர் என்றும், கேரளத்திலிருந்து 7,540 ஊழியர்கள் சென்னைக்கு அனுப்பப்பட்டனர் என்றும் மக்கள் சபையில் உள்நாட்டிலாகா மந்திரி தத்தார் தெரிவித்திருக்கிறார்.

சென்னையிலிருந்து கேரளத்திற்கு முழுவதுமாக ஒரு மாவட்டம் மாற்றப்பட்டது; ஆனால், கேரளத்திலிருந்து சென்னைக்கு $4\frac{1}{2}$ தாலுகாக்கள் மட்டுமே மாற்றப்பட்டன என்பது நினைவுகூரத்தகது.

'மக்கள்மீது பழியைச் சுமத்துவதா பொறுப்பு?'

ஆங்கில இதழின் கருத்து

'அதிகப்படியான கட்டணம் செலுத்தி அனுப்பப்படும் துரிதக் கடிதங்கள் தாமதமாகக் கிடைப்பதற்குக் காரணம், மக்கள் 'துரித விநியோகம்' என்ற சிவப்புத் துண்டுகளை கடிதங்களில் ஒட்டாததேயாகும்,' என்று மாநிலங்கள் சபையில் அமைச்சர் கூறியுள்ள விளக்கத்தைப்பற்றி 'டைமஸ் ஆப் இந்தியா' என்ற ஆங்கில இதழ் எழுதுகையில், மக்கள்மீது பழியை சுமத்துவதைவிட, தபால் இலாகா எல்லா நிலையங்களிலும்குறிப்பிட்ட அந்தச் சிவப்புத் துண்டுகளை மக்களுக்கு இல்லையென்று கூறாது கோரியவுடன் வழங்குவதற்கு வசதி செய்யவேண்டும் என்று பொறுப்பை எடுத்துக் காட்டியுள்ளது.

ஏனோ, இந்த நிலை?

பிரிட்டன் தரவேண்டிய போர்ப்பிற்காலக் கடனின் இந்த ஆண்டு வட்டி பாக்கியைத் தள்ளுபடி செய்யுமாறு அமெரிக்காவையும், கனடாவையும் கோரப் போவதாகக் காமன்ஸ் சபையில், பிரிட்டிஷ் நிதி அமைச்சர் கூறியுள்ளார்.

மேட்டூரில் ஒரு

அலுமினியத் தொழிற்சாலையாம்!

பாட்னா, டிச 6—

நேவைப்படும் அலுமினியத்தை இந்தியாவிலேயே உற்பத்தி செய்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன், ஆண்டிற்கு ஒவ்வொன்றும் 10,000 டன் உற்பத்தி செய்யக் கூடிய இரு அலுமினியத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு இந்திய சர்க்கார் உத்தேசித்திருக்கிறதாம்.

இதில் ஒன்று, சென்னை மாநிலத்தில் மேட்டூர் அணை அருகிலும் மற்றொன்று உத்திரப் பிரதேசத்திலுள்ள ரீகண்டிலும் ஏற்படுத்தப்படுமாம்.

கனடாவின் உதவியுடன் இந்திய நிறுவனம் ஒன்று, ரூ. 14 கோடி செலவில், ஆண்டிற்கு 10,000 டன் அலுமினியம் உற்பத்தி செய்யக் கூடிய ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்து வருகிறது; ஒரிசாவில் இராகுட் என்ற இடத்தில் இத்தொழிற்சாலை நிறுவப்படும்; இவ்வாண்டிலேயே தொழிற்சாலைக்கான வேலைகள் துவங்கிவிட்டனஎன்றும், உற்பத்தி 1958-ம் ஆண்டு துவங்கும் என்றும் தெரியவருகிறது.

வளங்கொழிக்கும் வடக்கில் உரத் தொழிற்சாலையாம்!

திட்டங்கள் வகுத்துத் தருவதற்கு அந்நிய நிறுவனம் நியமனம்

புதுடில்லி, டிச 6—

ஞர்கேலா உருக்குத் தொழிற்சாலையிலிருந்து கிடைக்கிற வாயுக்களை மூலப் பொருளாக உபயோகிக்கக்கூடிய இரசாயன உரத் தொழிற்சாலையொன்றை அங்கே அமைப்பதென முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும், இதற்கான திட்டங்களை வரையறுத்துத் தருவதற்கு மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த நிறுவனமொன்று நியமிக்கப்பட்டிருக்கிறதென்றும் மக்கள் சபையில் நிதி அமைச்சர் தகவல் தந்துள்ளார்

துணி இயந்திர சாதனம்

உற்பத்தியை அதிகரிப்பதற்கு இந்தியாவில் திட்டம்

'துணி இயந்திர சாதனங்கள் பிரச்சினையில், வெளிநாட்டு இறக்குமதிகளை நம்பியிருக்க வேண்டிய நிலையை நீக்குவதற்காக இந்தியாவிலுள்ள துணி இயந்திர சாதன உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தியை அதிகரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்' என்று, மாநிலங்கள் சபையில் அறிவித்த மொரார்ஜி தேசாய், இது பற்றி நிர்ணயமான திட்டமெதுவும் சர்க்காரால் வகுக்கப்படவில்லையென்றும், அத்தொழிலின் முன்னேற்றத்தைக் கண்காணித்து வருவதற்காகவும், உற்பத்திக் கஷ்டங்கள் ஏற்பட்டால் அவற்றை அகற்றுவதற்காகவும் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

சென்னை நகரசபை உபதேர்தல்

சென்னை நகர சபைக்கு 14-வது வட்டத்திலிருந்து உறுப்பினராகச் சென்ற காங்கிரஸ் அபேட்சகர் அலகிரி சிங்கர் (நாயுடு) அவர்கள் தேர்தல் செல்லாதென்று தீர்ப்பளிக்கப்பட்டதை ஒட்டி, காலியாகும் இடத்திற்கு 29—12—56 அன்று உபதேர்தல் நடைபெறும் என்று தெரியவருகிறது.

இந்தத் தேர்தலில் சுயேச்சையாக தோழர் ஆர். லோகநாதன் அவர்கள் போட்டியிடுகிறார் என்றும் தெரியவருகிறது.

இத்தேர்தலில், வாக்குச் சீட்டில் குறி போடும் முறையை மேற்கொள்ள வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

காசியில், கூட்டுறவுத் தீப்பெட்டித் தொழிற்சாலையொன்றை அமைப்பதற்காக இந்திய சர்க்கார் ரூ. 2,85,700 வழங்கியுள்ளனர்.

சென்னை மாநிலத்தில்

உணவு - சிற்றுண்டி விடுதிகள்

எண்ணிக்கை பற்றி தகவல்

புதிய மாநில அமைப்புக்கு முன்னர் சென்னை மாநிலத்தில் 17,308 உணவு, சிற்றுண்டி விடுதிகள் இருந்தனவாம்; அவைகளில் மொத்தம் 33,157 தொழிலாளர்கள் வேலை செய்து வந்தனராம்.

தற்போது சென்னை நகரில் மட்டும் 1,944 உணவு, சிற்றுண்டி விடுதிகள் உள்ளனவாம்; அவைகளில் மொத்தம் 5 380 தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனராம்.

மலபார் மாவட்டத்தில் உள்ள 2,552 உணவு—சிற்றுண்டி விடுதிகளில் 2 827 தொழிலாளர்களே வேலை செய்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சினிமாக் கொட்டகைகள்

புதிய மாநில அமைப்புக்கு முன்னர் சென்னை மாநிலத்தில் 358 சினிமாக் கொட்டகைகள் இருந்தன; அவற்றில் மொத்தம் 4,644 பேர் பணிபுரிந்து வந்தனராம்.

சென்னை நகரில் மட்டும் தற்போது 40 சினிமாக் கொட்டகைகள் உள்ளனவாம்; அவைகளில் மொத்தம் 1,015 பேர் வேலை செய்கின்றனராம்.

'சட்டசபையில் தாய்மொழியிலேயே பேசலாம்'

ஐதராபாத், டிச. 5—

வி. பி. ராஜு என்ற மந்திரி, ஆந்திரப் பிரதேச சட்டசபையில் பேசத் துவங்குகையில், ஆங்கிலத்தில் பேச முற்பட்டார்.

உடனே பல உறுப்பினர்கள், அவர் தெலுங்கு மொழியில் பேச வேண்டும் என்று விரும்பினர்.

சபைத் தலைவர் காளேசுவர ராவ் 'உறுப்பினர்கள் தங்களுக்குரிய தாய்மொழியிலேயே பேசலாம்,' என்று கூறினார்.

தமிழ்

தமிழ் உறுப்பினரான அரங்கனாத முதலியார் எழுந்து, 'தமிழ் உறுப்பினர் ஒருவர் சபையில் இருக்கிறார்,' என்று கூறியதும், சபைத் தலைவர், 'அவர் தமிழிலேயே பேசலாம்,' என்று கூறியிருக்கிறார்.

மந்திரி பணிவு

உறுப்பினரின் விருப்பத்திற்கொப்ப, மந்திரி தெலுங்கு மொழியில் பேசியிருக்கிறார்.

★

சிறுபான்மை மொழியினருக்குத் தனி அதிகாரி!

புதுடில்லி, டிச. 5—

'சீக்கிரமே, ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள சிறுபான்மை மொழியினரின் நலன்களைப் பாதுகாப்பதற்காக விசேட அதிகாரிகள் நியமிக்கப்படுவர்,' என்று மத்திய மந்திரி தத்தார், மாநிலங்கள் சபையில் கூறியிருக்கிறார்.

ரூ. $5\frac{1}{2}$ கோடி செலவில் மண்வாரி இயந்திரங்கள்

26,750 ஏகர் நிலங்கள் 'ஆர்ஜிதம்' செய்ய அனுமதி

புதுடில்லி, டிச. 5—

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தில் முழு அளவில் உற்பத்தித் துவங்கியதும் ஆண்டொன்றுக்கு 30 இலட்சம் டன் நிலக்கரி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறதென்று மக்கள் சபையில் தெரிவித்த உற்பத்தி அமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"ரூ. $5\frac{1}{2}$ கோடி செலவில் மண்வாரி இயந்திரங்களும் விசேட சுரங்கக் கருவிகளும் வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன; 26,750 ஏகர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன; வெளியேற்றப்பட்டவர்களை காட்டு நிலத்தில் குடியமர்த்த சென்னை சர்க்காரால் ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்."

வறண்ட நிலங்களில் ஆராய்ச்சித் திட்டம்

புதுடில்லி, டிச. 4—

வறண்ட நிலங்களில் விஞ்ஞான ஆராய்ச்சி செய்யும் பெரியதோர் திட்டத்திற்கு ஐ. நா. கல்வி, விஞ்ஞான, கலாச்சார அமைப்பு ஒப்புதல் அளித்துள்ளது; இந்தத் திட்டத்திற்கு 4-இலட்சம் டாலர் செலவிடப்படும்.

நிலங்களில் அணுசக்தி கதிரணுக்கள் அதிகரிப்பு

டோக்கியோ, டிச 2—

ஜப்பானிலுள்ள நிலங்களில் அணுசக்திக் கதிரணுக்கள் சென்ற ஆண்டைவிட நான்கு மடங்கு அதிகரித்துள்ளதாம். பசிபிக் கடலிலும் சைபீரியாவிலும் நடைபெற்ற அணு ஆயுதப் பரிசோதனையின் விளைவே இந்த அதிகரிப்புக்குக் காரணமென ஜப்பான் விஞ்ஞானிகள் கருதுகின்றனராம்.

மிகவும் அபாயம் விளைவிக்கக் கூடிய 'ஸ்டிராட்டியம்' அணுக்கள் எவ்வளவு படிந்திருக்கிறது என்பதும் கணக்கிடப்பட்டுவருகிறதாம்

அணுபிளப்பு சாதனங்கள்

இந்தியாவிலேயே நிர்மாணம் செய்வது சாத்தியமாம்

ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக, அணு பிளப்பு சாதனங்களை இந்தியாவிலேயே சொந்தமாக நிர்மாணித்துக்கொள்வது 'முற்றிலும் சாத்தியம்' என்றும், அதற்காகும் செலவு, சாதனத்தின் அளவைப் பொறுத்திருக்கும் என்றும், செலவு விவரம் பற்றி இவ்வளவு சீக்கிரத்தில் கூறுவதற்கில்லையென்றும் பண்டித நேரு மக்கள் சபையில் கூறியுள்ளார்.

இந்தியாவில் டெலிவிஷன்

இந்திய நிலைமைகளுக்கேற்ப அந்தச் சாதனம் இயங்கும்?

புதுடில்லி, டிச. 6—

'டெலிவிஷனுக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது' என்று மாநிலங்கள் சபையில் அறிவித்த அமைச்சர் கேஸ்கர், பம்பாய் டெலிவிஷன் நிலைய வேலை 1957—58-ல் ஆரம்பமாகுமென்றும் டில்லியில் இது சம்பந்தமான பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்காக சாதனங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன என்றும், இந்திய நிலைமைகளுக்கேற்ப அந்தச் சாதனத்தை இயக்குவது குறித்துத் தொழில் நுட்ப ஆலோசனை பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவென்றும் கூறினார்.

சூரிய சக்திமூலம் உப்புநீர் நல்ல நீராக மாறும்!

வாஷிங்டன், டிச. 4—

உப்புத் தண்ணீரை சூரிய சக்திமூலம் நல்ல தண்ணீராக மாற்றும் சிக்கனமான முறைகளில் அபிவிருத்தி காணப்பட்டு வருவதாகக் கூறப்பட்டிருக்கிறது; இதனால் பல்லாயிரக் கணக்கான சதுரமைல் அளவு நிலம் சாகுபடிக்குக் கிடைக்கும்.

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

தோழர் ஞா. சி. அன்பழகன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். இறுதியில் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இராசிபாளையம்:

11—11—56 மாலை 5 மணிக்கு இராசிபாளையம் தி. மு. கழகம், தி. மு. க. மாணவர் கிளை ஆகியவை சார்பில், விழாவையொட்டி தோழர் க. கந்தசாமி தலைமையில் ஊர்வலமும், கழகக் கட்டிடத்திற்கு முன் தோழர் இரா. ப. அய்யாசாமி தலைமையில் விழாப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை — பெரம்பூரிலா இரயில் பெட்டி ஆசன அமைப்புத் தொழிற்சாலை?

மக்கள்சபையில் தகவல்

புதுடில்லி டிச. 6—

சென்னை—பெரம்பூருக்கு அருகில் இரயில் பெட்டி ஆசன அமைப்புத் தொழிற்சாலை ஒன்றை அமைக்க இரயில்வே போர்டு முடிவு செய்திருக்கிறதென்றும், அதற்கு சுமார் ரூ 3,70,000 செலவாகுமென்றும் மக்கள்சபையில் அறிவித்த அமைச்சர் அளகேசன் அத்தொழிற்சாலையில் சுமார் 250 பேர் பணியாற்றுவரென எதிர்பார்க்கப்படுவதாகவும், ஆண்டுதோறும் அத்தொழிற்சாலையில் வசதிகள் அமைத்த சுமார் 350 இரயில் பெட்டிகள் வீதம் உற்பத்தியாகுமென்றும் கூறினார்.

இந்திய மாலுமிகளுக்கு சென்னையில் விடுதி

புதுடில்லி, டிச. 6—

சென்னையில் ரூ. 4 இலட்சம் செலவில் இந்திய மாலுமிகளுக்கான விடுதி கட்டிமுடிக்கப்பட்டபின், அதில் குறைந்தபட்சம் 150 மாலுமிகள் தங்க வசதி இருக்குமென்று மக்கள் சபையில் தகவல் தந்த அமைச்சர் அழகேசன், இவ்விடுதியை அமைப்பதற்கு தனிப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து ஏற்கனவே ரூ. 1 இலட்சம் நன்கொடை கிடைத்திருப்பதாகக் கூறியுள்ளார்.

அரியலூர் விபத்து

கொல்லப்பட்டோர் எண்ணிக்கை விபரம்

சென்னை, டிச. 5—

அரியலூர் இரயில் விபத்தில் 152 பிரயாணிகள் கொல்லப்பட்டதாகவும், 113 பேர் காயமடைந்ததாகவும் தென்பகுதி இரயில்வே பொதுமக்கள் உறவுமுறை அதிகாரி விடுத்துள்ள அறிக்கை கூறுகிறது

"முதல் வகுப்பில் 9 பேரும் இரண்டாம் வகுப்பில் 14 பேரும் உட்பட, மொத்தம் 249 பிரயாணிகள் முதல் 6 பெட்டிகளில் இருந்ததாக விழுப்புரத்தில் கணக்கிடப்பட்டுள்ளது; இந்த ஆறு பெட்டிகளும்தான் நதியில் விழுந்தன.

"7-வது பெட்டி பார்சல் வண்டி; 8-வது பெட்டிக்குச் சேதமில்லை; தடம் புரண்டது; இப்பெட்டியில் இருந்த 48 பிரயாணிகளில் சிலர் காயமடைந்தனர்.

"கடைசி 4 பெட்டிகளிலும் (பார்சல் வண்டி உட்பட) முதல் வகுப்பில் 13 பேரும், இரண்டாம் வகுப்பில் 8 பேரும், மூன்றாம் வகுப்பில் 45 பேரும் பிரயாணம் செய்துகொண்டிருந்தனர்

"விருத்தாசலம், அரியலூர் ஆகிய இடங்களில் ஒரு சில பிரயாணிகள், வண்டியில் ஏறியிருக்கலாம்; இவர்களின் தொகை மிக குறைவாகவே இருந்திருக்கும்" என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது

ஈரோடு அருகே காவேரிமீது பாலம்!

11 இலட்சம் ரூபாய் செலவில் அமையுமாம்

ஈரோடு, டிச. 4—

கோவை—சேலம் மாவட்டங்களை இணைக்கும் வகையில், ஈரோட்டிற்கும் பள்ளிப்பாளையத்திற்கும் இடையில் காவேரி நதி மீது ஒருபாலம் கட்டும் திட்டத்தை சென்னை சர்க்கார் நிறைவேற்றுவார்கள் என்று தெரியவருகிறது

பாலத்திற்கு ரூ. 11 இலட்சம் செலவாகும் என்றும், கோவை, சேலம் மாவட்டங்கள் ஒவ்வொரு இலட்ச ரூபாயும், சமுதாய நலத்திட்ட நிர்வாகம் ரூ. 1 இலட்சமும் ஈரோடு நகரசபை 50,000 ரூபாயும் தருமென்றும், எஞ்சிய தொகை மாநில மத்திய சர்க்கார்களால் தரப்படும் என்றும் கூறப்படுகிறது

குற்றங்கள் குறைகின்றன!

ஆமதாபாத், டிச. 2—

கடந்த மூன்று ஆண்டுகளில் 5,700 பேர் கொலை போன்ற குற்றங்களுக்காக இங்கு கைது செய்யப்பட்டதாகவும், இது ஆமதாபாத் போன்ற பெரிய நகரத்திற்கு மிகவும் குறைவானதென்றும், 1956-ல் இதுவரையில் 1,685 பேர்களே கொலை போன்ற குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டனர் என்றும் போலீஸ் அதிகாரி அறிவித்துள்ளார்.

சென்னை பி.&சி. ஆலை

தி. மு. க. தேர்தல் நிதிக்குழு உறுப்பினர்கட்கு:

"16—12—56 பகல் 2 மணிக்கு, சென்னை, ஸ்டிரான்ஸ் ரோட் திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றப் பணிமனையில் தேர்தல் நிதிக்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். 15-12-56 வரை தேர்தல் நிதி வசூலிக்குமாறும், 16-12-56 கூட்டத்தில் வசூலித்த நிதியையும் நன்கொடை இரசீதுப் புத்தகத்தையும் சேர்க்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்"

என்று சென்னை பி. அண்டு. சி. ஆலை தி. மு கழகத் தேர்தல் நிதிக்குழுச் செயலாளர் தோழர் கே. சுப்பிரமணி அறிவிக்கிறார்.

பொய்ச் செய்தியாம்!

சிரியா நாட்டின் அமைச்சரவை இராஜிநாமாச் செய்துவிட்டதென்றும், இராணுவக்குழு ஒன்று ஆட்சியைக் கைப்பற்றியதாகவும் வெளியான செய்தியில் சிறிதும் உண்மை கிடையாதாம்; சிரியாவின் பகைவர்களான பாக்தாத் ஒப்பந்த நாடுகளும் இஸ்ரேலும்தான் இந்தப் பொய்ச்சேதிக்குக் காரணமாம்!

இடைநிலைக்கல்வியின் விஸ்தரிப்புக்காக மத்திய சர்க்கார், 1955—56-ம் ஆண்டில், பல்வேறு மாநிலங்களுக்கு மொத்தம் ரூ. 2,43,71,960 நிதி உதவியாக வழங்கினர்.

மாநிலமெங்கும் புதிய தமிழக அமைப்பு நாள் விழா

புதிய தமிழக மாநில அமைப்பினை ஒட்டி, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கி, தமிழகமெங்கிலுமுள்ள கிளைக் கழகங்கள், மன்றங்கள், படிப்பகங்கள், மற்றும் தனிப்பட்ட நிறுவனங்கள் சார்பில் தமிழக அமைப்பு நாள் விழாக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. தமிழக அமைப்பினை வரவேற்றும், புதிய தமிழகத்துடன் சேர்க்கப்படாது விட்டுப்போன திரு—கொச்சி, ஆந்திர—தமிழகப் பகுதிகளைத் தாய்த் தமிழகத்துடன் இணைக்குமாறு கோரித் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்நிகழ்ச்சிகள் அனைத்தும் சுருக்கிக் கீழே தரப்பட்டுள்ளன :—

சென்னை :

37-வது வட்டம் :

11—11—56 காலை 11 மணிக்கு, சென்னை — இராயப்பேட்டை தி. மு. கழகப் பணிமனையில், தோழர் ம. கி. இராமலிங்கம் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர் மு. அர்ச்சுனன் கொடி ஏற்றிவைத்தார். தோழர்கள் பலர் பேசினர்.

42-வது வட்டம் :

11—11—56 காலை 9 மணிக்கு தோழர் கோ. தாமோதரம் தலைமையில் கிளைக் கழகப் பணிமனையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

46-வது வட்டம் :

11—11—56 காலை 9 மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில் தோழர் கை. பிரமையா தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர் இராம. வெள்ளையன் பேசினார்.

48-வது வட்டம் :

16—11—56 இரவு 7 மணிக்கு, கிளைக் கழகப் பணிமனையில் தோழர் தண்டபாணி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

சிந்தாதிரிப்பேட்டை :

11—11—56 காலை, சென்னை—சிந்தாதிரிப்பேட்டை கலைவளர் மன்றத்தில் தோழர் இறைமுடி மணி தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

குயப்பேட்டை :

11—11—56 காலை 9 மணிக்கு, சென்னை குயப்பேட்டை திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றப் பணிமனையில் தோழர் புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

இராயபுரம் :

18—11—56 காலை 10 மணிக்கு, சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில், அட்டபாளையம் பசனைக்கோயிலில் திரு. அ. முனுசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசியபின், தமிழகப் பெயர் கோரிக்கை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பேரையூர் :

11-11-56 மாலை தோழர் மாரிமுத்து தலைமையில் விழாக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

சேவூர் (வ. ஆ. மா.):

11—11—56 இரவு 8 மணிக்கு தோழர் வி. இ. செயராமன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் விடுபட்ட திரு-தமிழக, ஆந்திர-தமிழகப் பகுதிகளை உடன் சேர்க்குமாறு அரசியலாரைக் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கீழப்பாவூர்:

11—11—56 இரவு 8 மணிக்கு கீழப்பாவூர் தி. மு. கழகத்தில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் திரு-தமிழக, ஆந்திர-தமிழகப் பகுதிகளைத் தாய்த் தமிழகத்துடன் இணைக்குமாறு கேட்டுக்கொண்டும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்படன.

கீரமங்கலம்:

11—11—56 மாலை கீரனூரில் தோழர் எம். சுப்பையா தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசியபின், முக்கியத் தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன.

நாகப்பட்டினம் :

11—11—56 மாலை 6 மணிக்கு, நாகை கிளைக் கழகக் கட்டிடத்தில் தோழர் வி. எஸ். பெருமாள் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

தொடையூர் :

11-11-56 இரவு 9 மணிக்கு, திருச்சி மாவட்டம் தொடையூர் தி. மு கழக அலுவலகத்தில் தோழர் மு. செங்குட்டுவன் தலைமையில் விழாக்கூட்டம் நடைபெற்றது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வளவனூர் :

11-11-56 மாலை தோழர் நா. காமதேவன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசினபின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சிறாருக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

சின்னாளப்பட்டி :

12-11-56 இரவு 7 மணிக்கு, தி. மு. கழக இல்லத்தில் தோழர் பி. பொன்னம்பலம் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் பலர் பேசினபின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பரமக்குடி :

11-11-56 மாலை பரமக்குடி கிளைக் கழகப் பணிமனையில் தோழர் எம். ஏ. வகாப் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

கீரனூர் :

11-11-56-ல் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தமிழக அமைப்பு குறித்துத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

கரூர்:

11-11-56 காலை 10½ மணிக்கு கரூர் ஆலை தி. மு. கழகத் தோழர்களால், ஆலை கேட்டிற்கு எதிரில் தோழர் எம். கே. கரிகாலன் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது தோழர் என். இரத்தினம் எம். எல். ஏ., மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர்.

அன்று மாலை 4 மணிக்கு கரூர் நகர தி. மு. கழகச் சார்பில் தோழர் என் இரத்தினம் எம். எல். ஏ., தலைமையில் குமரன் சிலை முன்னிருந்து ஊர்வலமும், 6½ மணிக்கு நாகம்மையார் திடலில் தோழர் இரா. வைரப்பெருமாள் எம்.சி. தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

காட்பாடி :

18-11-56 மாலை காட்பாடி தி. மு. கழகச் சார்பில் தோழர் இலட்சுமணன் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஏ வி. பி. ஆசைத்தம்பி, மற்றும் பலர் பேசினர். தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு ரூ. 7—11—0 கொடுக்கப்பட்டது.

புதுவை :

11-11-56 காலை 9 மணிக்கு, புதுவை திருக்கல்யாண நிலையத்தில் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சி. பி. சிற்றரசு, மற்றும் பலர் பேசினர். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புறத்தாக்குடி :

16—11—56 மாலை 5 மணிக்கு, லால்குடி வட்டம் புறத்தாக்குடியில் தோழர் வடிவேலன் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினபின் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கொட்டாரக்குடி :

12—11—56ல் தோழர் ஆர். சந்தானம் தலைமையில் இளங்கோ படிப்பகத்தில், விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினபின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காஞ்சீபுரம் :

11—11—56 மாலை 6 மணிக்கு, பெரியகாஞ்சீபுரம் தேரடி அருகில் தோழர் டி. சீனுவாசன் தலைமையில் விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், எஸ். எஸ். தென்னரசு, இரா. வெங்கடேசன், மற்றும் பலர் பேசினர்.

சூலூர் :

11—11—56 காலை 10 மணியளவில், சூலூர் தி. மு. கழகக் கிளைச் சார்பில், வள்ளுவர் படிப்பகத்தில் தோழர் எஸ். என். அற்புதசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினபின், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் சிறாருக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

பம்பாய்—கம்பாலா ஹில்

11—11—56 இரவு. 10-30 மணிக்கு ஆஜி அலை திடலில்,

(1-ம் கலம் பார்க்க)

ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அவரது இல்லத்திலிருந்து விமான நிலையம்வரை அவரது உடல் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

பம்பாய் அவரது சொந்த ஊர் என்ற முறையில், அங்கு அவரது சவ அடக்கம் நடைபெறும் என்று தெரிகிறது.

நாடெங்கிலும் அனுதாபம்

அம்பேத்கார் மறைவுக்கு தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கும் வகையில், சென்னை பக்கிங்காம் கார்நாடிக் ஆலைத் தொழிலாளர்கள் இன்று பூரண வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர்.

திருச்சி அம்பேத்கார் மாணவர் இல்ல துக்கம்

டாக்டர் அம்பேத்கார் மறைந்தார் என்ற செய்தி வானொலியில் கேட்டதும், இல்ல மாணவர்கள் 6—12—56 மாலை 6 மணிக்கு, கருப்புத் துணி அணிந்துகொண்டனர்; திரு வீராசாமி எம். பி அம்பேத்கார் அவர்களது தொண்டு பற்றிப் பேசினார். இன்று முதல் ஒரு வாரத்திற்கு துக்கம் மேற்கொள்ளப்படும்.

அவரது மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்து அவரது குடும்பத்தாருக்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் செய்திகள் வந்தவண்ணமுள்ளன.

★

வாழ்க்கை வரலாறு:

பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கார் என்பது, டாக்டர் அம்பேத்காரின் முழுப் பெயராகும்.

63 வயதாகும் அம்பேத்கார் 1893-ம் ஆண்டு பிறந்தார். சதாராவிலும் பம்பாயிலும் தமக்கல்வி பெற்றார்.

பரோடா செய்வாரிடம் உபகாரச் சம்பளம் பெற்று அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக் கழகம் சென்று பொருளாதாரம் முதலியன பயின்றார்.

1917-ம் ஆண்டில் ஜெர்மனி சென்று, பின், அங்கிருந்து லண்டன் சென்று பொருளாதார வர்த்தகக் கல்வியில் டி. எஸ். சி. பட்டம் பெற்றார்; பின், லண்டனிலேயே சட்டப் படிப்பும் பெற்றார்.

இந்தியா திரும்பியதும் சிலநாள் வழக்கறிஞராயிருந்து விட்டு, சட்டக் கல்லூரி ஆசிரியராகி, பின், சட்டக் கல்லூரியின் முதல்வராக உயர்ந்தார்.

அரசியல் நுழைவு

தாழ்த்தப்பட்டவரது நிலை அவரை அரசியலுக்கு இழுத்து வந்தது.

லண்டனில் 1930, 1932-ம் ஆண்டுகளில் நடைபெற்ற வட்ட மேஜை மாநாடுகளில் அவர் தாழ்த்தப்பட்டவரின் பிரதிநிதியாகச் சென்றிருந்தார்.

1942-ம் ஆண்டில் வைசிராய் கவுன்சில் (பொருளாதார) உறுப்பினராஞர்; பின், 1946-ம் ஆண்டுவரை அந்தக் கவுன்சிலில் பணியாற்றிவிட்டபின், அரசியல் நிர்ணயசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மந்திரியானர்!

பின், 1947 ஆகஸ்ட் 15-ல், நேரு மந்திரிசபை அமைத்த போது, அவர் சட்ட மந்திரியாக பதவி ஏற்று 1951-வரை பதவி வகித்தார்.

அவர், இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களில் முதன்மையானவராவார்.

ஆசிரியர்

பல புத்தகங்கள் எழுதியுள்ள அவர் சிறந்த ஆசிரியராவார்; பொருளாதார, அரசியல் துறைகளில் அவர் சிறந்த நூல்கள் எழுதியுள்ளார்.

புத்த மதத்தைத் தழுவினர்

அண்மையில்தான் அவர் 2-இலட்சம் தாழ்த்தப்பட்டவர்களோடு, கும்ப சகிதமாகப் புத்த மதத்தைத் தழுவினர்.

சென்னை 39-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

8—12—56 இரவு 9½ மணிக்கு சென்னை 39-வது வட்ட தி மு கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டம், இவ்வட்டக் கழகப் பணிமனையில் நடைபெறும்

சென்னை 14-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு:

9—12—56 காலை சென்னை 14-வது வட்ட தி. மு கழக இல்லத்தில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். இவ்வட்டக் கழக வரவு-செலவு கணக்கு, 'தேர்தல் நிதி வாரம்', மற்றும் பல பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சென்னை 27-வது வட்ட தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு:

9—12—56 காலை 10 மணிக்கு சென்னை 27-வது வட்ட தி. மு கழகப் பொது உறுப்பினர் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும் சில முக்கியப் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும்.

காஞ்சீபுரம் நகர தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு:

9—12—56 காலை 10 மணிக்கு பெரிய காஞ்சீபுரம் செவ்வழீர் ஓலட வீதியில் உள்ள தி. மு கழகக் கட்டிடத்தில், நகர தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். 'தேர்தல் நிதி வாரம்', மற்றும் பல பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

கரூர் தி. மு. கழகத் தொகுதிக் குழுக் கூட்டம்

9—12—56 மாலை 3 மணிக்கு, புகலூர் சர்க்கரை ஆலைக்கு எதிரில் தோழர் எஸ். கே. சாமியப்பன் இல்லத்தில் கரூர் தி. மு. கழகத் தொகுதிக் குழுக் கூட்டம் நடைபெறும். தி மு. கழகத் தேர்தல் நிதி சேகரித்தல், தொகுதிக் குழுவை விரிவுபடுத்தல் போன்ற முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக் கெடுத்துக் கொள்ளப்படும்.

நெய்வேலி நிர்வாகம்

புதுடில்லி, டிச. 6—

இந்திய அரசாங்கத்தின் நிறுவனமான 'நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேஷன் லிமிடெட்,' நெய்வேலி நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டது; இது 9 டைரக்டர்களைக் கொண்டதாம்.

சென்னை சிம்சன் குரூப் தொழிலாளர் தி.மு.க. தேர்தல் நிதி செயற்குழுக் கூட்டம்

9—12—56 காலை 9 மணிக்கு சென்னை 29-வது வட்ட தி மு கழகப் பணிமனையில், சென்னை சிம்சன் குரூப் தொழிலாளர் தி மு கழகத் தேர்தல் நிதிச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும்

தாராபுரம் தி. மு. க. தொகுதிக் குழு உறுப்பினர்கட்கு:

9—12—56 மாலை 6 மணிக்கு, மூலனூர் வழிப்போக்கர் தங்கும் விடுதியில், தாராபுரம் தி மு. கழகத் தொகுதிக் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். தி. மு கழகத் தேர்தல் நிதி சேர்ப்பது குறித்து ஆலோசிக்கப்படும்.

பெங்களூர் திரு. வி. க. மன்ற ஆண்டு விழா

9—12—56 மாலை 5-30 மணிக்கு, பெங்களூர் நண்பர், சிவன் செட்டி கார்டன (சங்கர நாராயண சபை அருகில்) எதிரில், திரு. வி. க மன்ற முதல் ஆண்டு விழாக் கூட்டம் டாக்டர் டி. எம். வேதாசலம் தலைமையில் நடைபெறும்; பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் தோழர்கள் கு. சோதிலிங்கம், சற்குணம் ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர்.

பெங்களூர் மாவட்டத்தில் க. அன்பழகன் நிகழ்ச்சிகள்

★

டிச. 9: காலை 9 மணி—சிறப்புக் கூட்டம்;
மாலை 5 மணி-திரு. வி. க. மன்ற ஆண்டு விழா;
10: மாலை 4 மணி—தூய குணசையப்பர் கல்லூரி தமிழ்ச்சங்கக் கூட்டம்;
11: மாலை 5 மணி—சோலார் தங்கவயல் — ஆண்டர் சன்பேட்டை பொதுக் கூட்டம்;

பெங்களூரில் சிறப்புக் கூட்டம்

9—12—56 காலை 9 மணிக்கு பெங்களூர் மாவட்ட தி. மு. கழக வளர்ச்சி நிதிக்காக, பெங்களூர் காந்திநகர் குப்பி தியேட்டரில் தோழர் எஸ். ஜே உசேன் தலைமையில் சிறப்புக்கூட்டம் ஒன்று நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், ஏ. கே. வில்வம் ஆகியோர் 'தேர்தலில் நாம்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவர். அண்ணு, இரா. நெடுஞ்செழியன், ஏ. வெ. கி. சம்பத் ஆகியோர் சொற்பொழிவுகள் ஒலிபரப்பப் படும். கூட்டத்தில் தி. மு. கழகப் பொதுத் தேர்தல் நிதி வழங்கப் படும்.

திருவள்ளூர் அழகிரி படிப்பக ஆண்டு விழா

9—12—56 மாலை 6 மணிக்கு திருவள்ளூர் அழகிரி படிப்பக இரண்டாம் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம், தெருவீதி அம்மன் கோவில்தெருவில் தோழர் எல் முருகேசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி ஆசைத்தம்பி, சி. ஆர் பால சுந்தரம், மா. கல்யாணசுந்தரம், டி. ஆர். வரதன் எம். சி., ஆகியோர் பேசுவர்.

திருமணங்கள்

9—12—56 காலை 9 மணிக்கு திருவாரூரையடுத்த புலிவலம் மேலவீதி மணமகன் இல்லத்தில் தோழர் எஸ். திருஞானசம்பந்தம் —தோழியர் இராசலட்சுமி திருமணம் நடைபெறும். தோழர் மு கருணாநிதி வாழ்த்துரை வழங்குவார்.

* * *

9—12—56ல் திருமணம்பட்டி மணமகன் இல்லத்தில் தோழர் இரா. அரங்கசாமி—தோழியர் பார்வதி திருமணம் திரு. எம். சி. சிதம்பரனார் தலைமையில் நடைபெறும். திரு. கண்ணிவாடி கே. எஸ். எஸ். பெரியார் வாழ்த்துரை வழங்குவார்.

* * *

9—12—56 காலை 8 மணிக்கு இருகூர் தி. மு. கழகத் தோழர் வீ. பண்புராசன்—தோழியர் ந. அங்கம்மாள் திருமணம் தோழர் ப. தீவிரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

சென்னை மிகவும்.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஒரு நகரின் அடிப்படை; சுதந்திர போது, நகர மக்களின் தினசரித் தேவைகளும், வசதிகளும் தேடித்தரவேண்டும்; தேசிய வாழ்க்கை முறையைப் பாதுகாக்க வேண்டும்; இது ஒரு கலையாகும்! இந்தக் கலையில் எல்லா நகர அதிகாரிகளும் தேர்ந்தவர்களாயிருக்க வேண்டும்" என்றும் சினப் பிரதமர் கூறியிருக்கிறார்.

நிராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. பதிப்பாளர்: இரா. நெடுஞ் செழியன் எம். ஏ.

தி. மு. க. தேர்தல் நிதிக்காக!

9-12-56-ல் S. I. A. A. திடலில்

அண்ணு அவர்கள் தலைமையில்

கலை உலக மூவேந்தர்கள் அளித்திடும்

கலைவிருந்து!

★

எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி,

பி. எஸ். தட்சிணாமூர்த்தி, டி. என். கிருஷ்ணன், மோகன்,
மனோரமா, நிர்மலா, குமாரி
மற்றும் எஸ்.எஸ்.ஆர். குழுவினர் நடிக்கும்

மு. கருணாநிதி அவர்களின் **மணிமகுடம்** நாடகத்தில் சில காட்சிகள் நடைபெறும்

★

கே. ஆர். இராமசாமி, டி. என். கருணாநிதி,

எம்.என்.கிருஷ்ணன், ஏ.எம்.மருதப்பா, வி.எஸ்.நடேசன்,
காக்கோல் ராஜு, எம். ஏ. கணபதி, எம். ஆர். சண்முகம்,
டி. கே. காந்தா, ஏ. எம். மோகனா, பி. எஸ். சீதாலட்சுமி
மற்றும் கே. ஆர். ஆர். குழுவினர் நடிக்கும்

அண்ணு அவர்களின் **ஓர் இரவு** நாடகத்தில் சில காட்சிகள் நடைபெறும்

★

எம். ஜி. இராமச்சந்திரன், எம். ஜி. சக்கரபாணி,

என்.எஸ். நாராயணன் (பிள்ளை), முத்துக்கூத்தன், சொக்கலிங்கம், சேதுபதி,
சண்முகம், ஜி. சகுந்தலா, சி. டி. இராசகாந்தம், புஷ்பலதா, இந்திரா
மற்றும் எம். ஜி. ஆர். குழுவினர் நடிக்கும்

சுமைதாங்கி புதிய நாடகம்

கதை வசனம்: ஆர். பாண்டுரங்கன் எம்.ஏ., பாடல்கள்: முத்துக்கூத்தன், இசை அமைப்பு: என். எஸ். பாலகிருஷ்ணன்
பின்னணி: ஜி. கஸ்தூரி, கிருஷ்ணமூர்த்தி

★

காணிக்கை தாரீர்—கழகக் கலைஞர்கள் அளிக்கும் கலைவிருந்து பருகிட வாரீர்!

கட்டணம்: ரூ. 10, 5, 3, 1; பெண்கள் ரூ. 1.

குறிப்பு:-6—12—56 வியாழன் முதல் சென்னை—இராயபுரம் தி. மு. க. தலைமை நிலையத்தில் ('அறிவகம்') டிக்கெட்டுகள் கிடைக்கும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)